**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.167** **நாள் : 01.10.2024**

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 1,311 விளம்பரப் பலகைகள் மற்றும் 317 விளம்பரப் பதாகைகள் அகற்றப்பட்டுள்ளன.**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியில்லாமல் அமைக்கப்பட்டுள்ள அனைத்து விளம்பரப் பலகைகள் (Placards), விளம்பரப் பதாகைகள் (Digital Banners) மற்றும் சுவரொட்டிகள் (Posters) எவ்வித பாகுபாடுமின்றி தீவிரமாக அகற்றப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில், நேற்று (30.09.2024) 15 மண்டலங்களிலும் மேற்கொள்ளப்பட்ட களஆய்வுகளில் அனுமதியின்றி அமைக்கப்பட்ட 1,311 விளம்பரப் பலகைகள் (Placards), 317 விளம்பரப் பதாகைகள் (Digital Banners) என மொத்தம் 1,628 விளம்பரங்கள் கண்டறியப்பட்டு, அவை மாநகராட்சி அலுவலர்களால் அகற்றப்பட்டுள்ளன.

**அதன் விவரம் :**

| மண்டலங்கள் | விளம்பரப் பதாகைகள் (Digital Banners) | விளம்பரப் பலகைகள் (Placards) | மொத்தம் |
|---|---|---|---|
| திருவொற்றியூர் | 14 | 11 | 25 |
| மணலி | 4 | 2 | 6 |
| மாதவரம் | 9 | 119 | 128 |
| தண்டையார்பேட்டை | 12 | 0 | 12 |
| இராயபுரம் | 42 | 60 | 102 |
| திரு.வி.க.நகர் | 21 | 52 | 73 |
| அம்பத்தூர் | 31 | 0 | 31 |
| அண்ணாநகர் | 11 | 0 | 11 |
| தேனாம்பேட்டை | 71 | 458 | 529 |
| கோடம்பாக்கம் | 14 | 261 | 275 |
| வளசரவாக்கம் | 12 | 205 | 217 |
| ஆலந்தூர் | 39 | 0 | 39 |
| அடையாறு | 5 | 24 | 29 |
| பெருங்குடி | 13 | 66 | 79 |
| சோழிங்கநல்லூர் | 19 | 53 | 72 |
| **மொத்தம்** | **317** | **1311** | **1628** |

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விளம்பரப் பலகைகள், விளம்பரப் பதாகைகள் மற்றும் சுவரொட்டிகள் அகற்றும் பணியானது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**